**தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021**
---------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,
- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் தற்காலிக பேருந்துச் சேவைகளுக்காக தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட 25 அனுமதிப் பத்திரங்களைக் கொண்ட பதினாறு புத்தகங்கள் | 2021 ஆம் ஆண்டில் தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப்பத்திர புத்தகங்களில் 07 புத்தகங்கள் தேசிய போக்குவரத்து | வருமானம் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுத் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்காததுடன் அதற்குரிய வருமானம் வருமானத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவிற்கு இன்னும் கிடைக்கப்பெறாததுடன் அந்தப் புத்தகங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறதுடன் பயன்படுத்தப்பட்ட தற்காலிக அனுமதிப் பத்திர புத்தகங்களை கையளிப்பதில் குறிப்பிட்ட காலதாமதம் ஏற்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிறுவனம் 02 அரச வங்கிகளால் ஒவ்வொன்றும் ரூபா 300,000 வீதம் 510 பேரூந்து உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 153,000,000 கடனுக்காக உத்தரவாதம் அளித்திருந்ததால் அதற்கு ஒத்த தொகையில் நிகழத்தக்க பொறுப்பொன்றை நிறுவனத்திற்கு ஏற்படுத்தியது. எனினும் 2021 நிதிக்கூற்றுக்களில் அந்த நிகழத்தக்க பொறுப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட நிகழத்தக்க பொறுப்பு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | தற்செயல்கள் நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பு மீதி ரூபா 55,608,904 அக காணப்பட்டதுடன் அது தொடர்பான கேள்வி பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கேள்வி வைப்புப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பஸ்டியன் மாவத்தையில் மலசலகூட முறைமைக்கான வாடகையாக ஒப்பந்தம் செய்த கம்பனியிடம் இருந்து ரூபா 7,609,660 தொகை பெறப்பட வேண்டியிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிலுவைகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9.1.2 ஆம் பிரிவு | ஊழியர்களின் காப்புறுதி மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்காக பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 6,666,198 செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் அரை அரசாங்க (semi-government) ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர்கள் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். | நலன்புரித் திட்டங்கள் தொடர்பாக திறைசேரி மற்றும் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | மிகைப் பணத்தை முதலீடு செய்யும் போது அதற்காக நிதி அமைச்சின் இணக்கப்பாடும் சம்பந்தப்பட்ட அமைச்சரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும் அத்தகைய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ஆணைக்குழு ரூபா 44,842,369 தொகையை நிலையான வைப்பிலும் ரூபா 15,645,319 தொகையை திறைசேரி உண்டியல்களிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிப்பாளர் சபையின் அங்கிகாரத்தின் அடிப்படையில் முதலீடு செய்திருந்தது. மேலும், அத் திகதியில் உள்ளவாறு ரூபா 379,238,858 தொகை குறுகிய கால முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | தற்காலிகமாக பணத்தை முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கு 2019.02.07 ஆம் திகதிய கோரிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் அதற்கான பதில் இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். | உரிய அங்கீகாரத்தின் கீழ் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு | 2020 ஒக்தோபர் 12 முதல் 2021 ஆகஸ்ட் 18 வரை போக்குவரத்து அமைச்சின் சேவைக்கு ஒரு முகாமைத்தவ உதவியாளர் விடுவிக்கப்பட்டார். அவருக்கு சம்பளமாக ரூபா 584,842 தொகை, மருத்துவ விடுமுறை மீள்நிரப்பலாக ரூபா 104,480 தொகை மற்றும் அந்தக் காலத்திற்கான மிகையூதியமாக ரூபா 30,000 தொகை உள்ளடங்கலாக ரூபா 719,322 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவரை அமைச்சுக்கு விடுவிப்பதற்காக வழங்கப்பட்ட அங்கீகாரம் அல்லது சம்பளம் உட்பட படிகளின் கொடுப்பனவு ஆகியவற்றைக் குறிக்கும் எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட கடிதமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தர் 2021.08.17 முதல் போக்குவரத்து அமைச்சின் உதவி பதவியணியினரிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர் மீண்டும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் சேவைக்கு அறிக்கையிட்டுள்ளார்.<br><br>தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளை மீள்நிரப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 106,295,655 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 24,743,349 ஆகும். ஆகையால் நிதி விளைவில் ரூபா 81,552,306 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வீதி அனுமதிப்பத்திர கேள்விகளுக்கான வருமானம் ரூபா 104,639,191 குறைவடைந்தமையே இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

**2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

2021 ஆம் ஆண்டில், ஆணைக்குழுவின் முக்கிய வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ள வீதி அனுமதிப்பத்திர வருமானம் மற்றும் வீதி அனுமதிப்பத்திர கேள்வி வருமானம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 1,900 சதவீதத்தாலும் 385 சதவீதத்தாலும் குறைவடைந்துள்ளன.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 0.31 ஆகும், மேலும் முன்னைய ஆண்டு விகிதமான 0.27 ஐ விட ஒப்பீட்டளவில் அதிகமாக இருந்ததால் இது பாதகமான சூழ்நிலையாக அவதானிக்கப்பட்டது.

- மீளாய்வாண்டிற்கான தேறியலாப விகிதம் முன்னைய ஆண்டை விட 108 சதவீதம் குறைவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | G.I.S முறைமையின் பராமரிப்புக்காக பேருந்து உரிமையாளர்களிடம் இருந்து அறவிடப்பட்ட தொகையை விட ரூபா 3,530,745 மேலதிக செலவினம் ஏற்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டத்தின் நோக்கம் வருமானம் ஈட்டுவது அல்ல, ஆனால் போக்குவரத்துத் துறையின் தரத்தை மேம்படுத்துவதற்கு பாதுகாப்பான மற்றும் திறமையான போக்குவரத்து சேவையை வழங்குவதாகும். | இந்த சேவை பராமரிப்புக்கு போதிய வருமானம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | ஆணைக்குழு பொதுவான களஞ்சியமொன்றை முறையாகப் பேணியிருக்காததுடன் பொருட்கள் களஞ்சியங்களிற்கு கிடைத்த பின்னர் பொருள் பெறுகை குறிப்பில் பதிவு செய்யப்படுவதில்லை. சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பொருட்களை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வழங்குதலை நாளாந்தம் சமநிலைப்படுத்தி பதிவேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தொடர்புடைய பதிவேடுகள் பேணப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பு மீதி ரூபா 55,608,904 ஆக காணப்பட்டதுடன் அதற்குரிய கேள்வி வைப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கேள்வி வைப்புப் பதிவேடு பேணப்பட வேண்டும். |

### 3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவினால் இலத்திரனியல் முற்கொடுப்பனவு அட்டைகளை அறிமுகப்படுத்துவதற்கு ரூபா 8.6 மில்லியனும், அலுவலக வளாகத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு சூரிய மின்கலங்களை நிறுவுவதற்கு ரூபா 15 மில்லியனும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழலுங்கப்படவில்லை. | வருடாந்த வரவுசெலவுத்திட்ட நடவடிக்கைகள் குறித்துரைக்கப்பட்ட கால எல்லை ஒன்றுடன் செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 219 ஆக காணப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் 178 ஆகும். மேற்படி பதவியணியினரில் 170 பதவியணி உறுப்பினர்கள் நிரந்தர அடிப்படையிலும், 07 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் பணியாற்றினர், மேலும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 31 ஆகும். எனினும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடப் பதவிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அனைத்து ஆட்சேர்ப்புகளையும் அரசாங்கம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதால் உரிய வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 முதல் 04 வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஏழு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். | இந்த ஊழியர்களை உறுதிப்படுத்துமாறு போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் பரிந்துரைகள் ஊடாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் எழுத்து மூலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. | உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும். |

### 3.4 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முறையே ரூபா 2,952,000, ரூபா 1,730,900 மற்றும் ரூபா 1,000,000 பெறுமதியான 03 வாகனங்கள் 05 வருடங்களுக்கும் மேலாக வளாகத்தில் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களை அப்புறப்படுத்தவோ அல்லது திருத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் பொது ஏலம் மூலம் அகற்றும் பணியை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களை அகற்றுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதிடப்பட்ட வருமானத்தை உண்மையான வருமானத்துடன் ஒப்பிடும் போது 16 சதவீதம் முதல் 73 சதவீதம் வரையான வீச்சிலான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதிடப்பட்ட செலவினத்தை உண்மையான செலவினத்துடன் ஒப்பிடும் போது 30 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையான வீச்சிலான முரண்கள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் ஒரு பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவும் கொரோனா தொற்றுநோய் காரணமாக குறிப்பிட்ட இலக்குகளின் பிரகாரம் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது, இதனால் இந்த முரண்கள் ஏற்பட்டன. தொடர்ந்துவரும் ஆண்டில் முரண்களை குறைப்பதில் கவனம் செலுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் ஒரு பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும். |